

## முன்மாதிரியாக விளங்கும் ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களை,

# வெளி மாநில முதலமைச்சர்கள் பாராட்டுகிறார்கள்!

**வேலூர்,நவ.6-**

**வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில், 49,021 பயனாளிகளுக்கு ரூ.415 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் வழங்கினார். வேலூர் மாவட்ட உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காக கடந்த நான்கரை ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் விவரங்களைக் குறிப்பிட்டு உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``நம் திராவிட மாடல் அரசின் வாயிலாக, இந்தியாவுக்கே முன்மாதிரியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டுக்கு வருகின்ற பல வெளி மாநில முதலமைச்சர்களும், நமது அரசின் திட்டங்களை அவர்கள் மாநிலத்தில் செயல்படுத்துவோம் என்று நம் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளார்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

## வேலூரில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



வேலூர் மாவட்டத்தில் நடைபெறுகிற இந்த அரசு விழாவில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பயனாளிகளுக்கு 415 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். இந்த வாய்ப்பை அளித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கலந்துகொண்ட பொதுமக்கள் அத்தனை பேருக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேலூர் கோட்டை தனிச்சிறப்பு

தமிழ்நாட்டின் பெருமைகளில் வேலூரும் ஒன்று. ‘வேலூர் கோட்டை’, ‘சி.எம்.சி. ஹாஸ்பிட்டல்’ என இங்கு இருக்கும் எல்லாமே இந்திய அளவில் புகழ்பெற்ற இடங்கள். தமிழ்நாட்டில் பல ஊர்களில் கோட்டைகள் இருக்கலாம். ஆனால், இந்த வேலூர் கோட்டைக்கு மட்டும்தான் தனிச்சிறப்பு உண்டு. வேலூர் கோட்டையில் மட்டும்தான் கோயிலும் இருக்கிறது, சர்ச்சும் இருக்கிறது, பள்ளிவாசலும் இருக்கிறது. வேலூர் கோட்டை என்பது மதச்சார்பின்மைக் கோட்டையாக சிறப்பாக இங்கு விளங்கிக்கொண்டு இருக்கிறது.

வேலூர் கோட்டை மட்டுமல்ல, வேலூர் மக்களும் கூட மதச்சார்பின்மையை பாதுகாக்கிற மக்களாக இருக்கிறீர்கள். வேலூர் மக்களுக்கு இருக்கும் இந்த ஒற்றுமை உணர்வு, இந்தியா முழுவதும் இருக்க வேண்டும் என்பதுதான் நம் அனைவரின் விருப்பமும், ஆசையும். எனவே, நாட்டுக்கே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய வேலூர் மக்கள் உங்களை சந்திப்பது எனக்கு கூடுதல் பெருமை.

இந்த விழா மிக மிக முக்கியமான விழா. ஏனென்றால், குடியிருக்கும் இடத்துக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன. கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட இருக்கின்றன. மகளிர் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு வங்கிக்கடன் இணைப்புகள், அடையாள அட்டைகள், இன்னும் பல நலத்திட்டங்கள் என்று இந்த நிகழ்ச்சி மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### கட்டணமில்லா விடியல் பயணம்

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 2021 இல் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதல் இன்றைக்கு வரை, எந்த திட்டத்தைச் செயல்படுத்தினாலும், அதில் மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய, மகளிர் அதிக அளவில் பயன் பெறக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்துக்குதான் முதல் கையெழுத்திட்டார்கள். இன்றைக்கு அந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் 820 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 15 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற சுமார் 22 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். பெற்றோர்கள் இன்றைக்கு இந்த திட்டத்தால், குழந்தைகளை வாழ்த்தி பள்ளிகூடத்துக்கு அனுப்புகிறார்கள். இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 41 ஆயிரம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கம் செய்யும்போது, பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து பாராட்டிப் பேசினார். இந்த திட்டத்தை விரைவில் என் மாநிலத்தில் செயல்படுத்தப் போகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார்.

### மகளிர் உரிமைத்தொகை

அரசுப்பள்ளியில் படித்த மாணவ மாணவிகள் உயர்கல்வியில் சேர்ந்தால், தமிழ்ப்புதல்வன் - புதுமைப்பெண் திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். அந்த மாணவ, மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை, நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி சேர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 50 சதவிகிதத்தோடு இன்றைக்கு தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது என்றால், அதற்கு காரணம் நம் முதலமைச்சர் அவர்கள் கல்விக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம்தான். இந்த திட்டங்கள் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரம் மாணவ - மாணவிகள் இந்த்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கொடுத்தார். நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் 15ஆம் தேதி அந்த திட்டத்தை அமல்படுத்தினார். ஒவ்வொரு மாதமும் இந்த திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் மகளிர் பயன்பெற்று வருகிறார்கள். நம் வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். வருகின்ற டிசம்பர் மாதம் முதல், இன்னும் கூடுதலான மகளிருக்கும், மகளிர் உரிமைத்தொகையைக் கொடுக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசின் வாயிலாக, இந்தியாவுக்கே முன்மாதிரியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டுக்கு வருகின்ற பல வெளிமாநில முதலமைச்சர்களும், நமது அரசின் திட்டங்களை அவர்கள் மாநிலத்தில் செயல்படுத்துவோம் என்று நம் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளார்கள்.

### கலைஞர் தங்கும் விடுதி

இந்த நான்கரை வருடத்தில் நம் முதலமைச்சர் அவர்கள், இந்த வேலூர் மாவட்டத்துக்கும் ஏராளமான திட்டங்களை தந்துள்ளார்கள். அதில் சிலவற்றை மட்டும், இங்கு குறிப்பிட விரும்புறேன். வேலூருக்கு மருத்துவ வசதிகளை பயன்படுத்த வரும் வெளியூர் மக்களுக்காக ரூ.46 கோடி மதிப்பீட்டில், டாக்டர் கலைஞர் தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகிறது.

வேலூரில் ரூ.198 கோடி மதிப்பீட்டில் அரசு பென்ட்லேண்ட் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, குடியாத்தத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பிலும், அணைக்கட்டில் 20 கோடி ரூபாய் மதிப்பிலும், காட்பாடியில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அரசு மருத்துவமனைகள், நாட்டின் சுதந்திரத்துக்கு பிறகு முதல்முறையாக பீஞ்சமந்தை மலை கிராமத்துக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதி, காட்பாடியில் 13 கோடி ரூபாய் மதிப்பில் அரசு கலை - அறிவியல் கல்லூரி, குடியாத்தம் நகரில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி ஸ்டேடியம் அமைக்கப்பட இருக்கிறது.

சத்துவாச்சாரியில் உள்ள விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வெயிட் லிப்டிங் சென்டர் விரைவில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அதே போல, சென்றாண்டு நடந்த அரசு விழாவில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் கோரியபடி, மாவட்ட விளையாட்டு வளாகத்தைச் சுற்றி, சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார். முதலமைச்சரின் கவனத்துக்கு அதை எடுத்துச் சென்றவுடன், அதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கி அதற்கான பணிகளும் விரைவில் துவங்க இருக்கின்றன.

### மினி ஜவுளி பூங்கா

விவசாயிகள் நிறைந்த இந்த மாவட்டத்தில் 181 கோடி ரூபாய் மதிப்பில் 9 தடுப்பணைகள், குடியாத்தம் பகுதி அப்துல்லாபுரத்தில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மினி டைடல் பூங்கா, மினி ஜவுளி பூங்கா இப்படி இந்த மாவட்டத்துக்கு நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

இந்தத் திட்டங்களின் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு இந்த மேடையில் பல நலத்திட்டங்களை கொடுக்க இருக்கிறோம். உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பதுதான் ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவை. அதில் இருக்க இடம் என்பது மிகமிக முக்கியமானது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நம்முடைய அரசு முன்னுரிமைக் கொடுத்து செயல்பட்டு வருகிறது.

நம் அரசு அமைந்த இந்த நான்கரை வருடத்தில் மட்டும், சுமார் 19 லட்சம் வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. பட்டா என்பது வெறும் தாள் கிடையாது, அது உங்களின் சட்டபூர்வமான உரிமை. உங்களின் உரிமையை, நம் அரசு இன்றைக்கு உண்மையாக்கியுள்ளது. இனி, நீங்கள் உங்கள் வீட்டில் கவலை இல்லாமல் நிம்மதியாக, மகிழ்ச்சியுடன் தூங்கலாம்.

பட்டாவை வைத்து நீங்கள் லோன் எடுக்கலாம், வீடு கட்டலாம், அரசின் பல சேவைகளை பெறலாம். ஆகவே, பட்டாக்களைப் பெற்று இருக்கிற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சுமார் 3 ஆயிரத்து 500 பேருக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளையும் கொடுக்க இருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களுக்கு தன்னுடைய செயலாலும் - சிந்தனையாலும், நிழலாக இருந்து தொண்டாற்றியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட கலைஞர் அவர்கள் பெயரில் வீடுகளைப் பெற்று இருக்கும் உங்களைப் பார்க்கும் போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. சொந்த வீடு என்பது நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களின் நீண்ட நாள் கனவு. அந்தக் கனவை நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் அதை உண்மையாக்கி இருக்கிறார்கள்.

### வங்கிக்கடன் இணைப்பு

இடம் - வீடு மட்டுமல்ல, நம்முடைய மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளுக்கு, வங்கிக்கடன் இணைப்புகளைக் கொடுக்க இருக்கிறோம். இந்த வங்கிக்கடன் இணைப்புகளை, குழுசகோதரிகளின் வாழ்க்கையையே மாற்றுவதற்கான முதலீடாகத்தான் நம் அரசு பார்க்கிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு அடையாள அட்டைகளை நாம் கொடுத்து இருக்கிறோம். இந்த அடையாள அட்டைகளை நீங்கள் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த அடையாள அட்டைகள் மூலம் உங்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கும்.

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழு சகோதரிகளை சந்திக்கும் போது அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். நாங்கள் தயாரிக்கின்ற பொருட்களை வெளியூருக்குச் சென்று விற்க, பேருந்துகளில் எடுத்துச் செல்ல அதிக செலவாகிறது என்று சொன்னார்கள். முதலமைச்சரிடம் அவர்களின் கோரிக்கையை சொன்னவுடன், அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க வேண்டும் என்று சொன்னார். அந்த அடையாள அட்டைகள் வைத்திருந்தீர்கள் என்றால், 25 கிலோ பொருட்களை, உங்கள் பகுதியிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்துக்குக் கட்டணமில்லாமல் பேருந்துகளில் பொருட்களை எடுத்துச் செல்லலாம்.

### திராவிட மாடல் அரசு

நீங்கள் இன்னும் பல உயரங்களைத் தொட நம் முதலமைச்சர் அவர்களும், நம் அரசும் உங்களுக்கு என்றைக்கும் துணை நிற்கும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உங்களுக்காக இவ்வளவு திட்டங்களைப் பார்த்து பார்த்து செயல்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டங்களைப் பற்றி நீங்கள் 4 பேருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அரசுக்கும், முதலமைச்சருக்குமான முகமாக, பிராண்டு அம்பாசிடர்களாக இங்கு வந்துள்ள பயனாளிகள் நீங்கள் திகழ வேண்டும்.

உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து உழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே, எப்போதும் போல, நம்முடைய திராவிட மாடல் அரசுக்குத் தொடர்ந்து உங்களின் ஆதரவை கொடுக்க வேண்டும்.

இந்த நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட நிர்வாகத்துக்கு மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.